DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 29/2019**

Deposition of witness for Prosecution **ம.**சா.2

Name : சாமிநாதன்
Father/ Husband Name : மீனாட்சிசுந்தரம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.10.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. கடந்த 06.03.2015-ம் தேதி புகார்தாரரின் வீட்டிற்கு நான் எதேச்சையாக சென்றிருந்தேன். நான் வீட்டிற்குள் போகும்போது புகார்தாரருக்கும் அவருடைய தம்பிக்கும் இடையே சாவி தொடர்பாக தகராறு நடந்து கொண்டிருந்தது. அப்போது எதிரி மண்வெட்டிக் கணையால் அவருடைய அண்ணனான புகார்தாரரை அடிக்கப் போனார். அப்போது நானும், வெள்ளையன் மகன் ராமநாதனும், வீரப்பன் மகன் ராஜீ என்ற விணைதீர்த்தான் விலக்கிவிட்டோம். விலக்கி எதிரியை கொண்டு வந்து வாசல் அருகே விட்டுவிட்டுவந்தோம். அப்போது முத்தையா நடுவாசலில் முற்றத்தில் நின்று கொண்டிருந்தார். மீண்டும் எதிரி வந்து சாவியால் புகார்தாரரை உச்சந்தலையில் அடித்து விட்டார்.

2. அதில் அவருக்கு தலையில் இரத்தக் காயம் ஏற்பட்டது. பிறகு காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் முதலில் முதலுதவி பெற்று வாருங்கள் என்று சொன்னார்கள். பிறகு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு தையல் போட்டார்கள்.

**(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.